**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.605/2023**
**வழக்கு சாட்சி – அ.சா.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மகேஸ் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | பொன்னாங்கன் | தொழில் | ஓட்டுநர் |
| கிராமம் | பெரியகுளம் | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.07.2024

**( 1வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2வது எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

அசா1 ராஜாவைத் தெரியும். நான் அவரிடம் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். எதிரி அரவிந்தனை தெரியும். 2வது எதிரியை எனக்குத் தெரியாது. கடந்த 15.07.2022 அன்று நானும், அசா.1, அவரது மகன் முத்துகுகன் மற்றும் 1வது எதிரி ஆகியோர் அசா1ன் வீட்டில் வைத்து முத்துகுகனின் TN 04 AW 6364 என்ற எண் கொண்ட லேண்ட்ரோவர் என்ற வாகனத்தை விலைக்கு வாங்குவது சம்மந்தமாக அரவிந்தன், அசா1 மற்றும் முத்துகுகன் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தார்கள். அசா.1 வாகனத்தின் விலை ரூ.50 லட்சம் என 1வது எதிரியிடம் கூறினார். முடிவாக வாகனத்தை ரூ46 லட்சம் என பேசப்பட்டது. ஏற்கனவே பெரியகுளம் ஐசிஐசிஐ வங்கியில் வாகன கடன் ரூ.22 லட்சம் இருந்தது. மேற்படி கடனை 1வது எதிரி 2.9.2022 அன்று செலுத்திவிட்டு வாகனத்தை எடுத்துக்கொண்டார். பாக்கி தொகையான ரூ24 லட்சம் ரூபாயை விரைவில் கொடுத்துவிடுவதாக கூறிவிட்டு சென்றார். நீண்ட நாட்கள் ஆகியும் ரூ24 லட்சம் பணத்தையும் அவர் கொடுக்கவில்லை. அசா.1, 1வது எதிரியிடம் நேரடியாகவும், போன் மூலமாகவும், பணத்தை கேட்டுப்பார்த்தார். ஆனால் 1வது எதிரி பணம் கொடுக்கவில்லை. வாகனத்தின் ஆர்சி புக்கின் அசல் 1வது எதிரியிடம் உள்ளது. 1வது எதிரி டீஓ பார்மில் (பெயர் மாற்றம்) முத்துகுகன் கையெழுத்தை போலியாக அவரே போட்டு வாகனத்தை கோயம்மபுத்தூரைச் சேர்ந்த கார்த்திகேயன் என்பவரது மனைவி

பிரியா என்பவரது பெயரில் பெயர் மாற்றம் செய்துள்ளார். அது சம்மந்தமாக அசா1, 1வது எதிரியிடம் போன் மூலம் கேட்டபோது உன்னால் முடிந்ததை பார் என்றும், போடா வெண்ண, உன்னை ஆள்வைத்து போட்டு தள்ளிவிடுவேன் என்று மிரட்டியுள்ளார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அசா1ன் உடன் பிறந்த சகோதரர் முன்னால் முதலமைச்சர் என்றால் சரிதான். அசா.1ன் உடன் பிறந்த சகோதரரின் மகன் தேனி தொகுதி எம்பி ஆக இருந்தார் என்றால் சரிதான். அசா.1 பெரியகுளம் நகர் மன்ற தலைவராகவும், மதுரை மாவட்ட ஆவின் தலைவராகவும் இருந்தார் என்றால் சரிதான். அசா.1இடம் நான் ஓட்டுநராக நான் பல ஆண்டுகளாக பணிபுரிந்தேன். எத்தனை வருடம் என்றால் 4-5 வருடங்கள் இருக்கும். ஒவ்வொரு வருடமும் வாகனங்களை வாங்குவதும், அவர் வைத்திருக்கும் வாகனத்தை விற்றுவிட்டு புதிய வாகனங்களை வாங்குவதை வழக்கமாக வைத்திருந்தார் என்றால் சரிதான். TN 04 AW 6364 என்ற எண் கொண்ட லேண்ட்ரோவர் என்ற வாகனத்தின் ஓட்டுநர் யார் என்றால் நான்தான். அந்த வாகனம் அசா2ன் வாகனம் என்றால் சரிதான். பொதுவாக அசா1 வாகனங்களை வாங்குவதற்கும், விற்பதற்கும் புரோக்கர் மூலமாக செயல்படுவார் என்றால் சரிதான். அசா.1, 2 ம் 1வது எதிரியும் சேர்ந்து வாகனத்தை ரூ50 லட்சத்திற்கு பேசி ரூ46 லட்சத்திற்கு பேசி முடித்ததற்கு ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தார்கள் என்றும், அதில் நான் சாட்சி கையொப்பம் இட்டேனா என்றால் இல்லை. மேற்படி ஒப்பந்தத்தில்தான் ரூ22 லட்சத்தை வங்கிக் கடனை அடைக்கவேண்டும், என்றும் ரூ24 லடசம் ரூபாயை கையில் கொடுக்கவேண்டும் என்று எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். சாட்சி மீண்டும் தனக்குத் தெரியாது என்றுகூறுகிறார். மேற்படி ஒப்பந்ததில் அசா1, 2 சாட்சிகளும், 1வது எதிரியும் கையெழுத்து போட்டார்களா என்றால் அது எனக்குத் தெரியாது. அவர்கள் மூவரும் என்ன பேசிக்கொண்டார்கள் என்பது எனக்குத் தெரியாது என்றால் சரிதான். ரூ 46 லட்சம் பேசி முடித்தது மட்டும் எனக்குத் தெரியும். 1வது எதிரியை எனக்கு எப்படித் தெரியும் என்றால் வண்டி வாங்கும்போது தான் எனக்குத் தெரியும். அதற்கு முன்பு தெரியாது. 22 லட்சம் ரூபாயை 1வது எதிரி வங்கி மூலமாக அடைத்தார். அசா1ம் நானும், 1வது எதிரியை பெரியகுளத்தில் வைத்து பார்த்து நேரடியாக பேசினோம். பெரியகுளத்தில் ஒருமுறை பார்த்து கேட்டோம். தேதி எனக்குத்

தெரியாது. அசா.1ம் எதிரியும் போனில் பேசிக்கொண்டது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அசா1 சொல்லித் தெரியும். மேற்படி வாகனத்தின் ஆர்சி புக்கை நான் பார்த்துள்ளேன். அது கார்டு ஆகும். மேற்படி கார்டில் வாகனத்தின் உரிமையாளரின் கையொப்பம் இருக்காது என்றாலும், ஆர்டிஓ மட்டும் தான் கையெழுத்திட்டு இருப்பார் என்றால் சரியல்ல, இருக்கும். மேற்படி வாகனத்தை விற்பதற்கு புரோக்கர் மூலமாக பேச்சுவார்த்தை நடந்ததா என்றால் இல்லை. கார் விற்பனைக்காக பேப்பரிலோ, டிவியிலோ விளம்பரம் கொடுத்தார்களா என்றால் இல்லை. அசா1 இடம் வேலை பார்த்த 5 வருடங்களில் 15.07.2022 மட்டும் தான் 1வது எதிரியை நான் பார்த்தேன் என்றால் சரிதான். 15.07.2022 ற்கு பின்பு 02.09.2022 அன்றுதான் பணத்தை கட்டினார் என்றால் சரிதான். 02.09.2022 – 22 லட்சம் கட்டியபின்புதான் மேற்படி வாகனம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். அப்போது அந்த வாகனத்தின் அசல் ஆவணங்கள் அனைத்தும் 1வது எதிரியிடம் ஒப்படைக்கப்பட்டது என்றால் ஆர்சிபுக் மட்டும் ஒப்படைக்கப்பட்டது. அசா.1ற்கு சொந்தமான பள்ளியில் வேலை பார்க்கும் சதீஸ் என்பவரை எனக்குத் தெரியும். மேற்படி சதீஸ் என்பவர் மூலமாகத்தான் 1வது எதிரி அரவிந்தன் அசா1ன் வீட்டிற்கு வந்தார் என்றால், தெரியாது. மேற்படி சதீஸ் என்பவர்தான் வாகனத்தை விற்பதற்காக புரோக்கராக செயல்பட்டார் என்றால் சரியல்ல. 1வது எதிரிவாகனத்திற்கு முழு தொகையை கொடுத்துவிட்டார் என்றும், அதனால்தான் அசல் ஆவணங்கள் அனைத்தும் அவரிடம் ஒப்படைக்ககப்பட்டது என்றும் 1வது எதிரி எவ்வித மோசடியில் ஈடுபடவில்லை என்றாலும், சரியல்ல. அசா1, 2 சாட்சிகளை எதிரிகள் ஏமாற்றவில்லை என்றாலும் சரியல்ல. அசா2 கையெழுத்து போட்டுக்கொடுத்தபின்புதான் 2வதுஎதிரியின் பெயருக்கு வாகனம் பெயர் மாற்றம் செய்யப்பபட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும்இவ்வழக்கின் குற்ற செயல்களுக்கம் சம்ந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், அசா1 கேட்டுக்கொண்டதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1வது எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணை 2வது எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.